DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.**

**அமர்வு வழக்கு எண்.** 205/2018

**அ.சா.**– 7

| | |
|---|---|
| பெயர் : திரு. விக்னேஷ் | கிராமம் : |
| த/பெ. : திரு. குமார் | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 23rd day of November, 2022.

**முதல்விசாரணை**:–

நான் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி, தூம்பிபாளையத்தில் குடியிருக்கிறேன். வங்கியில் பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 07.04.2017 ம் தேதி பிற்பகல் 12 மணியளவில் நான் தாராபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி அருகில் நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது ஆய்வாளர் ஆஜர் எதிரியை கைது செய்தார். எதிரி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.–6**. மேற்படி வாக்குமூலத்தில் நானும் வெங்கடாசலமும் கையொப்பமிட்டோம். பின்பு கொலை நடந்த இடத்திற்கு போலிசார், வெங்கடாசலம் ஆகியோர் அழைத்துச் சென்றனர். பின்பு இராசிபுரத்தான்காடு செல்லும் வழியில் உள்ள பெட்டிக்கடைக்கு அடியில் மறைத்து வைத்திருந்த ஒரு அரைக்கை சட்டை, ஒரு லுங்கி மற்றும் 2 ½ அடி நீளம் உள்ள கத்தி ஆகியவற்றை ஆஜர் எதிரி எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தார். ஆய்வாளர் அவற்றை மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர்

**அ.சா.ஆ.–7**. இரத்தக்கறை படிந்த பச்சை நிற வெள்ளை கருப்பு கட்டம்போட்ட கிழிந்த நிலையில் உள்ள லுங்கி – **சா.பொ.–4**. மஞ்சள் நிற அரைக்கை சட்டை கருப்பு வெள்ளை கோடுபோட்டது –**சா.பொ.–5**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை (எதிரி தரப்பில்):–**

என் வீட்டின் கதவு எண். 10/298. பன்னப்பட்டி, காடையாம்பட்டியில் நான் குடியிருந்ததில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை நான் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டேன். மேற்படி அழைப்பாணையில் உள்ள எனது கையொப்பம் மட்டும் **எ.த.சா.ஆ.–1**. விக்னேஷ் என்பது என் பெயர் அல்ல என்றும், குமார் என்பது என் தகப்பனாரின் பெயர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 07.04.2017 ம் தேதி தாராபுரம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு அருகில் நான் செல்வதற்கு முன்பே ஆய்வாளர் மற்றும் எதிரி அங்கு இருந்தனரா என்றால் இருந்தனர். ஆய்வாளர் என்முன்பு எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரி ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் எதிரியிடமிருந்து ஆய்வாளர் சான்று பொருட்களை கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசி பக்கத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். சம்பவ இடம் கிழக்கு பார்த்த வீடு என்றால் எனக்கு திசை தெரியாது. சம்பவம் நடந்த கிணற்றுக்கு அருகில் வீடுகள் இல்லை. எதிரி ஆய்வாளரையும் என்னையும் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இராசிபுரத்தான்காட்டு வளவுக்கு செல்லும் வழியில் மரப்பெட்டி கடை சாலையில் உள்ளது, ஆனால் மேற்படி பெட்டிக்கடை செயல்படாமல் இருந்தது. அந்த சாலையில் பொதுமக்கள் சென்றுகொண்டிருந்தனர்.சான்று பொருட்களுக்கும் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டேன் என்று

சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுமுதல்விசாரணை இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.– 8

| | |
|---|---|
| பெயர் : டாக்டர். திரு. R. கார்த்திக் | கிராமம் : |
| த/பெ. : திரு. ராமசாமி | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 23rd day of November, 2022.

**முதல்விசாரணை**:–

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் சட்டம்சார்ந்த மருத்துவத்துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 05.04.2017 ம் தேதி நான் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபொழுது பிற்பகல் 1.10 மணிக்கு தீவட்டிப்பட்டி காவல் நிலைய ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தை த.கா. 770 திரு.மாதேஷ் என்பவரிடமிருந்து பெற்று, மேற்படி திரு. மாதேஷ் மூலம் இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோனதாக சொல்லப்படும் திருப்பதியின் பிரேதத்தை அடையாளம் கண்டு பிற்பகல் 1.20 மணிக்கு சடலக்கூராய்வு செய்தேன். பிரேதம் உடல்முழுவதும் விறைப்புத்தன்மையுடன் காணப்பட்டது. பிரேதத்தின்மீது காணப்பட்ட இறப்பிற்கு முன்பான காயங்கள்

1. மூக்கின் வலதுபுறத்தில் இருந்து வலது கண்குழி வழியாக தலையின் வலது பக்கவாட்டு பகுதி வரையிலும் வலது காதின் கீழ்ப்பகுதி வரையிலும் 23 செ.மீ. X 2 செ.மீ. X எலும்பு ஆழத்தில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. மேற்படி காயத்தை

அறுத்து பார்த்தபொழுது அடியில் உள்ள எலும்பு முழுவதுமாக வெட்டப்பட்டும், அதற்கு அடியில் உள்ள மூளைச்சவ்வு வெட்டப்பட்டும், அடியில் உள்ள வலதுபுற மூளையின் பக்கவாட்டு பகுதியில் 10 X 1 X 1 செ.மீ. அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

2. கழுத்தின் இடது பின்பகுதியில் இருந்து கழுத்தின் நடுப்பகுதி வரை 13 X 2 செ.மீ. X எலும்பு ஆழத்திற்கு ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. மேற்படி காயத்தை அறுத்து பார்த்தபொழுது அடியில் உள்ள இரத்தநாளங்கள், நரம்புகள் முழுவதுமாக வெட்டப்பட்டும், அடியில் உள்ள தண்டுவடம் பகுதி வெட்டப்பட்டும் காணப்பட்டது.

3. தலையின் நடுப்பகுதியில் 6 செ.மீ. X 1 செ.மீ. X எலும்பு ஆழம் வரை ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அடியில் உள்ள எலும்பு பகுதி வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

4. தலையின்இடது பக்கவாட்டு பகுதியில் 7 X 1 செ.மீ. X எலும்பு ஆழத்திற்கு ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அடியில் உள்ள எலும்பு பகுதி வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

5. இடது காதிற்கு 5 செ.மீ. க்கு மேல் தலையின் இடது பக்கவாட்டில் 8 X 1 செ.மீ. X எலும்பு ஆழத்தில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அடியில் உள்ள எலும்பு பகுதி வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

6. இடது தோள்பட்டையில் இருந்து முதுகின் இடதுபக்கம் மேல்பகுதி வரை 22 X 2 செ.மீ. X தசை ஆழம் வரை ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

7. இடது கை புஜத்தில் 10 X 1 செ.மீ. X தசை ஆழம் வரை ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

8. மார்பின் இடதுபுறம் மேல் பகுதியில் 9 X 1 செ.மீ. X தசை ஆழம் அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

**<u>உட்புறக்கூராய்வு</u>**

தலை மற்றும் கழுத்து ஆகிய பகுதிகளை கூராய்வு செய்து பார்த்தபொழுது மேற்சொன்ன இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. மார்பை கூராய்வு செய்து பார்த்தபொழுது விலா எலும்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டன. இதயம் இயல்பான அளவிலும், இதய அறைகள் காலியாகவும் இருந்தன. பெரியதமனிகள், வால்வுகள் இயல்பான நிலையில் காணப்பட்டன. நுரையீரல்கள் இயல்பான நிலையில் வெளிறி காணப்பட்டன. வயிற்றை கூராய்வு செய்து பார்த்தபொழுது இரைப்பையில் 350 கிராம் அளவில் பகுதி செரிமானம் ஆன உணவுப்பொருட்கள் காணப்பட்டன. சிறுகுடலில் 20 மி.லி. அளவில் பித்தநீர் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவில் வெளிறி காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. இடுப்பு எலும்பு இயல்பான நிலையில் இருந்தது. கழுத்துப் பகுதியில் மேற்சொன்ன இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பரிசோதனைக்காக சேகரித்து அனுப்பி வைத்தேன். நான் உடற்கூராய்வு செய்த நேரத்திற்கு முன்பு 12 முதல் 24 மணி நேரத்திற்குள் மேற்படி நபருக்கு இறப்பு ஏற்பட்டிருக்கலாம். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **–அ.சா.ஆ.–8**. உடல் உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்து பெறப்பட்ட இரசாயன பகுப்பாய்வு அறிக்கை ( Toxicology Report or Viscera Report) – **அ.சா.ஆ.–9**. மேற்படி இரசாயன பகுப்பாய்வை நான் பார்வையிட்டு இறந்துபோன நபர் தனக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட வெட்டுக்காயங்களினால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்கலாம் என்று கருத்துக்கூறி நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.–10**. சா.பொ.–1 வீச்சருவாளால் ஒரு நபர் தாக்கப்படும்பொழுது நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காயங்கள் மற்றும் மரணம் ஏற்பட வாய்ப்பு உண்டு,. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்):–**

அ.சா.ஆ.–8 பிரேத பரிசோதனை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள காயங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் என்று நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். உட்புறகூராய்வில் நான் கபாலத்தின் அடிப்பகுதி நல்ல நிலையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன நபர் மது அருந்தி இருந்ததாக இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக தலையின் ஒருபக்கத்தில் காயம் ஏற்படும்பொழுது மறுபுறத்தில் Contrecoup Injury ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வெட்டுக்காயங்களில் அவ்வாறு ஏற்பட வாய்ப்பு இல்லை. நான் பார்வையுற்ற காயங்களில் கூர்மையான வளைந்த முனைப்பகுதி கொண்ட ஒரு ஆயுதத்தால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் இருந்தனவா என்றால் அது ஆயுதத்தை பயன்படுத்தும் விதத்தைப்பொருத்து அமையும். சா.பொ.–1 வீச்சருவாளை காட்டி ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. நான் அ.சா.ஆ.–8 பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காயங்கள் இறப்பிற்கு பின்பு ஏற்பட்டவை என்றால் சரியல்ல. போலிசார் வேண்டுகோளின்படி இறுதி கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சா.பொ.–1 வீச்சருவாளால் இறந்தநபருக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுமுதல்விசாரணை இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.